1982 மார்ச் 31

மாக்னசைட் டெட் பர்ன் மாக்னசைட்டாக மாற்றப்பட்டு, வட நாட்டிலே இருக்கிற இரும்பு உருக்காலைக்கு அனுப்பப்படுகிறது. மைய அரசு அனுமதித்து, நம்முடைய பகுதியிலே, சேலத்திலே, இரும்புத் தொழிற்சாலை வருகிறபொழுது, அப்பொழுது இது இங்கே பயன்படும்.

இந்திய சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனம்,

*வினா எண் 677—திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு அரசிடமிருந்து குத்தகைக்கு எடுத்த சிமெண்ட் ரிசர்ச் இன்ஸ்டியூட் ஆப் இந்தியா (சி.ஆர்.ஐ.) தினந்தோறும் எத்தனை டன் சிமெண்ட் உற்பத்தி செய்கிறது ?

(ஆ) சி.ஆர்.ஐ. நிறுவனத்திற்கு குத்தகை முடிவது எப்போது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) 20 டன்.

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம் கல்லக்குடிக்கு அருகில் முதுவத்தூரில் உள்ள முன்னோடி சிமிண்டு ஆலையை மைய அரசு சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (சி.ஆர்.ஐ.) குத்தகைக்கு விடவில்லை. மேற்படி ஆலை சரியாக இயங்காததால் இது மைய அரசு சிமிண்டு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஒரு ஆராய்ச்சி நிறுவனமாக தென்னகத்தில் இயங்குவதற்காக 6–6–1974 ஆம் நாள் தமிழக அரசால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது.

(முற்பகல் 10-00.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆராய்ச்சி செய்வதற்காகத் தமிழக அரசு இதை சி.ஆர்.ஐ.-யிடம் விட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் எந்தவிதமான ஆராய்ச்சியும் செய்யாமல், நாள்தோறும் 24 மணி நேரமும் மூன்று ஷிப்டுகள் வேலை செய்து 20 டன் சிமிண்டை உற்பத்தி செய்து விஸ்வகர்மா என்ற பெயரிலே விற்பனை செய்து வருவது அரசுக்குத் தெரியுமா? அது மட்டுமல்லாமல், தொழிலாளர் நலனைப் பொறுத்தவரையில் லேபர் ஆபீசர்கள் தொழிலாளர்களுடைய சட்டத்திற்கு உட்படுத்த வேண்டுமென்று சொல்லியும்கூட இது ஆராய்ச்சிக் கூடம் தான், ஆகவே இங்கே தொழில்கள் நடக்கவில்லை என்று சொல்லி வருவதும் அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

1982 மார்ச் 31

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல தமிழ்நாடு அரசு இதை மைய அரசு சிமின்டு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு—சி.ஆர்.ஐ-க்கு நன்கொடையாகக் கொடுத்தது. ஆராய்ச்சிகளெல்லாம் முடிவு பெற்றுவிட்டது. அதற்குப் பிறகு தமிழக அரசை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். சாதாரணமாக மினி பிளான்ட் என்றால்கூடக் குறைந்தது 400 டன் அல்லது 200 டன் கெப்பாசிட்டி இருந்தால் தான் ஒரு சிமின்ட் ஆலை இலாபகரமாக இயங்க முடியும். அதுவும் கன்ட்ரோலே இல்லாமல் வெளியே விற்கலாம் என்ற விதிமுறைகளுக்கு உட்பட்டிருந்தால்தான் அவ்வாறு முடியும். ஆனால் 20 டன் கெப்பாசிட்டிதான் என்றால் அதை யார் நடத்தினாலும் நஷ்டம்தான் வரும். ஆகவே, அவர்களை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள் என்று நாம் சொல்கிறோம். எங்களுக்கு வேண்டாம், நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படிக் கடிதத் தொடர்பு நடந்து கொண்டிருக்கிறது. மேற்கொண்டு என்ன செய்வது என்பதைப்பற்றிப் பரிசீலனையிலே இருந்து கொண்டிருக்கிறது.

திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த சிமின்ட் ஆலை எந்த நோக்கத்திற்காகப் பயன்பட வேண்டுமோ அந்த நோக்கம் நிறைவேற்றப் படவில்லை என்பதுதான் என்னுடைய வாதம். ஆராய்ச்சிக்காக ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அங்கே ஆராய்ச்சி செய்யப் படவில்லை, சிமின்ட் உற்பத்தி செய்து வெளியிடத்திலே வேறு பெயரில் விற்பனை ஆகிறது. இதனால் அரசுக்கும் வர வேண்டிய வருமானம் போகிறது; தொழிலாளர்களுடைய நலனும் பாதிக்கப்படுகிறது. ஏனென்றால், தொழிலாளர் நலனுக்காகப் பேக்டரி சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்றால், இது தொழிற்சாலை அல்ல, ஆராய்ச்சிக் கூடம்தான் என்று காரணம் காட்டுவதால் தொழிலாளர் நலனும் பாதிக்கப்படுகிறது. எனவே இதில் தீவிரமாகக் கவனம் செலுத்தி இந்த நிறுவனத்தை அந்தத் தொழிலாளர்களிடம் விட்டுவிடுவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது ஆராய்ச்சிக் கூடம்தான். மைய அரசுக்குச் சொந்தமான சி.ஆர்.ஐ. தான் அங்கே ரிசர்ச் செய்தது. தொழிலாளர்கள் நடத்தலாம் என்ற யோசனையை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறினார்கள். ஆனால் அதுபற்றித் தொழிலாளர்களிடமிருந்து எங்களுக்கு எந்த விதமான கோரிக்கையும் வரவில்லை. நான் ஏற்கனவே சொன்னேன், அந்த மினி பிளான்ட்—இன்னும் சொல்ல வேண்டுமானால் மினி மினி பிளான்ட் என்று கூடச் சொல்லலாம்—அப்படி 20 டன் கெப்பாசிட்டியை வைத்துக் கொண்டு என்ன செய்வது, எப்படிச் செய்வது என்பதைப்பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும்.

திரு. ஆர். உமாநாத்: பேரவைத் தலைவரவர்களே, சட்டி சுட்டது கைவிட்டது என்பதைப்போல, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதிலிருந்து நீங்களே வையுங்கள் என்று அவர்கள் சொல்வது மாதிரி சொன்னார்கள். சிறு தொழில்களை அதிகப்படுத்துவது ஊக்குவிப்பது என்பது மாநில அரசின் கொள்கையாக இருக்கும்பொழுது இலாப நஷ்டத்தைப் பார்த்துச் செய்வது அல்ல, வேலைவாய்ப்பு என்ற அடிப்படையில் அந்தக் கொள்கைக்கு உட்பட்டு, அவர்களாக ஆஃபர் செய்யும்பொழுது, சிமின்ட் ப்ரடொக்ஷன் நன்றாக ஆகும்பொழுது நாம் ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன், இது 20 டன் கெப்பாசிட்டி தான் என்று. மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னார்கள். வேலை வாய்ப்பைக் கருத்திலே கொண்டாவது, நஷ்டம் வந்தாலும் நடத்தலாமே என்று கூறினார்கள். இப்படி வேலைவாய்ப்பைக் கருத்திலே கொண்டு நஷ்டம் வந்து கார்ப்பரேஷன் நடத்தினால், பாருங்கள். கார்ப்பரேஷன், உங்கள் அரசாங்கத்தினாலே திறமைக் குறைவால் செராமிக் இன்டஸ்ட்ரி நஷ்டத்திலே ஓடுகிறது என்று சொல்வார்கள். அதிலே பத்தாயிரம் பேர் பணியாற்றுகிறார்கள் என்று சொன்னால் அப்பொழுது, அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை, நஷ்டத்திலே நடத்தப்படுகிறது என்பது போன்ற குற்றச்சாட்டுகள் சொல்லப்படுகின்றன. சாதாரணமாக மினி சிமின்ட் பிளான்ட் என்றால் 200 டன் கெப்பாசிட்டியாவது இருந்தால் தான் ஓரளவுக்கு வெற்றிகரமாக, இலாபகரமாக நடத்த முடியும். 20 டன் கெப்பாசிட்டியை வைத்துக்கொண்டு இலாபகரமாக நடத்துவது என்பது இப்பொழுது பரிசீலனை செய்யப்பட வேண்டியது, ஆய்வு செய்யப்பட வேண்டியது. எனவே, அது அரசினுடைய தீவிரமான பரிசீலனையில் இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை நவீனப்படுத்தும் திட்டம்

*வினா எண். 678 : திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல் படுத்தப்படும் ?

(இ) திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை **1978–79, 1979–80** ஆம் ஆண்டுகளில் ஈட்டிய லாபம் எவ்வளவு ?